தினமலர்
உண்மையின் உரைகல்
DINAMALAR
National Tamil Daily

# மரப்பெருக்கு நிறுவனத்தில் உலக சுற்றுச்சூழல் தினம்



கோவை வனமரபு மற்றும் மரப்பெருக்கு நிறுவனத்தில், உலக சுற்றுச்சூழல் தினம் கொண்டாடப்பட்டது.

**கோவை, ஜூன் 6 –** உலக சுற்றுச்சூழல் தினத்தை முன்னிட்டு, கோவையில் வன மரபியல் மற்றும் மரப்பெருக்கு நிறுவனத்தில், சுற்றுச்சூழலியல் குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சி நேற்று நடந்தது.

வனமரபியல் மற்றும் மரப்பெருக்கு நிறுவனத்தின் இயக்குனர் குன்னி கண்ணன், நிகழ்ச்சியை தொடங்கி வைத்து பேசிய போது, நிலச்சீரழிவு, வறட்சியால் சுற்றுச்சூழல் எதிர்கொள்ளும் பிரச்னைகள், இயற்கை சீற்றங்களால் சுற்றுச்சூழல் எவ்வாறு பாதிக்கிறது என்பதை குறித்து விளக்கினார்.

சுற்றுச்சூழல் மாசுபாடு மற்றும் வெள்ளம் நிலத்தடி நீர் எவ்வாறு மாசுபடுத்துகிறது என்பதையும் விளக்கினார். தலைமை விஞ்ஞானி ரேகா ஆர்.வாரியர் தனது அறிமுக உரையில், நடப்பு ஆண்டின் சுற்றுச்சூழல் குறித்த கருப்பொருள்மற்றும்இந்ததலைமுறையின் மறுசீரமைப்பின் முக்கியத்துவம் குறித்து விளக்கினார்.

சுற்றுச்சூழலைப் பாதுகாப்பதில் தனிநபரின் பங்கு, உலக சுற்றுச்சூழல் தினம் தொடர்பான செயல்பாடுகள் மற்றும் நுண்ணறிவு பற்றி விளக்கினார்.

25. News in Dinamalar, Coimbatore, 06.06.2024, Observance of World Environment Day 2024 by ICFRE-IFGTB EIACP.